සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Catholic

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 9	**கத்தோலிக்கத் திருமறை**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(01) மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

01. பழைய ஏற்பாட்டில் காணப்படும் வெளிப்பாட்டு இலக்கியம் எது?
1. திருவெளிப்பாடு 2. திருப்பாடல் 3. தானியேல் 4. லேவியர்

02. பின்வரும் நூல்களுள் ஞான நூல்களில் உள்ளடங்கும் நூல் ஒன்று,
1. யோசுவா 2. யோபு 3. எஸ்தர் 4. எஸ்ரா

03. "கடவுள் மீது நம்பிக்கை கொள்வோர் சீயோன் மலைபோல் நிலைத்திருப்பர்" இதில் 'சீயோன்' எனப்படுவது யாது?
1. எருசலேம் 2. சமாரியா 3. பெத்லகேம் 4. கலிலேயா

04. "மண்ணுலகில் நீ நாடோடியாய் அலைந்து திரிவாய்" என இறைவன் யாருக்கு தண்டனை கொடுத்தார்?
1. ஆதமுக்கு 2. ஏவாளுக்கு 3. பாம்புக்கு 4. காயீனுக்கு

05. 'உடல் பரத்தமைக்கு அல்ல, கிறிஸ்துவுக்காகவே' என எத்திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
1. எபேசியர் 2. கொலோசையர்
3. 1 கொரிந்தியர் 4. 2 கொரிந்தியர்

06. 'இறக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை இழந்து விட மாட்டேன்' என்ற கூற்றுக்கு உரியவர் யார்?
1. தூய அன்னை திரேசா 2. தூய மரிய கொறற்றி
3. தூய அவிலா திரேசா 4. தூய அக்னெஸ்

07. தூய டொமினிக் சாவியோவின் திருநாள் எப்போது கொண்டாடப்படுகிறது?
1. பங்குனி 10 ஆம் திகதி 2. தை 10 ஆம் திகதி
3. பங்குனி 20 ஆம் திகதி 4. வைகாசி 09 ஆம் திகதி

08. கார்மேல் மலை மீது பலிபீடம் அமைத்து பலி செலுத்திய இறைவாக்கினர் யார்?
1. இறைவாக்கினர் ஒசேயா 2. இறைவாக்கினர் எலிசா
3. இறைவாக்கினர் ஆமோஸ் 4. இறைவாக்கினர் எலியா

09. 'ஆசிப்பா' எத்தனையாம் ஆண்டில் உருவானது?
1. கி.பி. 1990 2. கி.பி. 1995 3. கி.பி. 1980 4. கி.பி. 1200

10. "மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இம் மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி" என இறைவனை புகழ்ந்து பாடியவர் யார்?
1. செக்கரியா 2. யோவான் 3. மரியாள் 4. சிமியோன்

(2 x 10 = 20 புள்ளிகள்)

Past Papers Wiki

(02) மிகப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து இடைவெளி நிரப்புக.

(பேறுபெற்றவர், வாய்மொழி, திருமுழுக்கு யோவான், ஆசிப்பா, நல்ல மனநிலையை)

01. ஆசிய நாடுகளின் ஆயர் ஒன்றியத்தின் ஆழ்ந்த தியானத்தின் பலனாக ..... உருவானது.

02. தூய பிரான்சிஸ் அசீசியாரின் செபம் ..... செபத்துக்குள் உள்ளடங்கும்.

03. இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் ..... என்பர்.

04. பிறருக்காக வாழவும், பிறரை மகிழ்விக்கவும் ..... ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

05. ஏரோது அந்திப்பாஸ் செய்த பாவத்தை ..... சுட்டிக்காட்டினார்.

(2 x 5 = 10 புள்ளிகள்)

(03) பின்வரும் கூற்றுக்களுள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (x) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.

01. சாலமோன் அரசன் இறைவனிடம் மிகுந்த செல்வத்தைத் தரும்படி வேண்டினார். (.....)

02. மனம் வருந்துதல் வழியாக தீய சிந்தனைகளை அழித்து விடலாம். (.....)

03. நாம் பிறரை பழிவாங்க மறு கன்னத்தை காட்ட வேண்டாமென இயேசு தம் சீடர்களுக்கு கற்பித்தார். (.....)

04. தாயின் கருவில் இருக்கும் போதே வாழ்வின் உரிமை இறைவனுக்கு மட்டுமே உரியதாகும். (.....)

05. எமது வாழ்வை ஆரோக்கியமாக பேணத் தேவையானவற்றை மேற்கொள்வதனால் எமது வாழ்வைப் பாதுகாக்க முடியும். (.....)

(2 x 5 = 10 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய வினாக்களில் நான்கினைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) எல்லா வினாக்களுக்கும் சுருக்கமாக விடை தருக.

1. யோவான் நற்செய்தியில் இயேசு கிறிஸ்து தமது இறைத்தன்மையை வெளிப்படுத்தும் 'நானே' என்ற சொற்பதங்கள் இரண்டு எழுதுக.
2. பாவத்தில் விழுந்த ஆதாமுக்கு இறைவன் கொடுத்த தண்டனைகள் இரண்டு எழுதுக.
3. நோவாவின் புதல்வர்கள் மூவரையும் குறிப்பிடுக.
4. நீதித்தலைவர்களின் பெயர்கள் இரண்டு குறிப்பிடுக.
5. சாவான பாவத்தினால் வரும் விளைவுகள் இரண்டு எழுதுக.
6. பொறாமை, சோம்பல் போன்ற தலையாய பாவங்களை நீக்க வளர்க்க வேண்டிய நற்குணங்கள் இரண்டையும் எழுதுக.
7. இறையருளின் இரு வகைகளையும் எழுதுக.
8. தாவீது அரசனிடத்தில் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டு எழுதுக.
9. தூய அகுஸ்தினாரின் மனமாற்றத்திற்கு காரணமாக இருந்த விடயங்கள் இரண்டு எழுதுக.
10. இவ்வுலக வாழ்வின் திருப்பயணத்தை முழுமையாக்கும் அருளடையாளங்கள் இரண்டு எழுதுக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02) 1. ஆறாம், ஒன்பதாம் கட்டளைகளை எழுதுக.
2. ஆறாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் மூன்று எழுதுக.
3. நீர் உமது வாழ்வைப் பாதுகாக்கச் செய்யக்கூடிய விடயங்கள் ஐந்து எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03) 1. தூய வாழ்வுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. தூய்மையான வாழ்வு வாழ்வதற்கு செய்ய வேண்டிய விடயங்கள் மூன்று எழுதுக.
3. தூய யோசேப் வாஸ் அடிகளார் செபத்தினால் மழை பெய்யச் செய்த புதுமையை சுருக்கமாக எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. இறைவனிடம் வேண்டுவோருக்கு நல்லதையே செய்வார் என்பதை உறுதிப்படுத்த இயேசு கூறிய உவமைகள் இரண்டு எழுதுக.
2. திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டில் காணப்படும் மகிழ்ச்சி நிறைந்த புகழ்பாக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. "நாம் நல்லதைக் கேட்டுச் செபித்தாலும் இறைவன் எமது வேண்டுதல்களை நிறைவேற்றுவதில்லை" எனக் கூறும் உமது நண்பனைத் தைரியப்படுத்தி, மீண்டும் செபத்தில் ஈடுபடுத்துவதற்காக நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் ஐந்து எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. தியானத்தின் வழியாக நடைபெறும் செயல்கள் இரண்டை எழுதுக.
2. கிறிஸ்தவ செப மரபில் செபத்தின் வகைகள் மூன்றினையும் எழுதுக.
3. கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு செபத்தின் வகைகள் உதவும் முறையை சுருக்கமாக விபரிக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) 1. நோயில் பூசுதல் வழியாகக் கிடைக்கும் வரங்கள் இரண்டு எழுதுக.
2. நோயாளியின் பால் எமக்குள்ள கடமைகள் மூன்று எழுதுக.
3. நோயாளிகளைத் தரிசிக்கும் போது சொல்லக்கூடிய செபம் ஒன்று எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. புனித யோவான் நற்செய்தி
2. நீதித் தலைவர்கள்
3. ஒப்புரவு அருளடையாளம்
4. ஆசிப்பா – வரலாறும், பின்னணியும்

(5 + 5 = 10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** - கத்தோலிக்க திருமறை

Catholicism விடைப்பத்திரம் - தரம் 09

பகுதி – I

(01)
1. 3
2. 2
3. 1
4. 4
5. 3
6. 2
7. 1
8. 4
9. 1
10. 4

(02)
1. ஆசிப்பா
2. வாய்மொழி
3. பேறு பெற்றவர்
4. நல்ல மனநிலையை
5. திருமுழுக்கு யோவான்

(03)
1. X
2. ✓
3. X
4. ✓
5. ✓

பகுதி – II

(01)

1. நானே வாழ்வு தரும் உணவு, நானே உலகின் ஒளி, ஆடுகளுக்கு வாயில் நானே...
2. நிலம் சபிக்கப்படுதல், வாழ்நாள் எல்லாம் வருந்தி அதன் பயனை உண்ணுதல்...
3. சேம், காம், எப்பேத்து
4. தெபோரா, கிதியோன், சிம்சோன்...
5. - இறைவனோடு கொண்டுள்ள நட்புறவு முறிந்து போகும்.
   - எங்களது ஆன்மீக வாழ்க்கை அழிவடையும்.
   - இறையருளை இழந்து நரகத்திற்கு செல்ல நேரிடும்.
6. சுறுசுறுப்பு, அன்பு
7. தூய்மையாக்கும் அருள், மெய் அருள்
8. - தன் தவறை ஏற்றுக் கொண்டார்.
   - தன் குற்றத்திற்கு மனம் வருந்தினர்.
9. - தாயாரின் வல்லமையான செபம்.
   - தூய அம்புறோசியாரின் வழிகாட்டல்.
10. ஒப்புரவு, நோயிற்பூசுதல்

(02)

1. - மோகபாவம் செய்யாதிருப்பாயாக.
   - பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக.
2. - ஆபாச நூல்களை வாசித்தல்.
   - பாலியல் வல்லுறவு, ஓரினச் சேர்க்கை.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்.

(03)

1. தூய மரிய கொறற்றி, தூய் அக்னெஸ்
2. - அடுத்தவரை மதித்து வாழ்தல்.
   - அவர்கள் உரிமைகளைப் பாதுகாத்தல்.
   - சுய கட்டுப்பாட்டுடன் வாழல், செபித்தல்.
3. பக்கம் 116

(04)

1. நேர்மையற்ற நடுவரும், கைம்பெண்ணும்.
   நள்ளிரவில் வந்த நண்பன்
2. மரியாவின் பாடல், செக்கரியாவின் பாடல், சிமியோனின் பாடல்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்.

(05)

1. கிறிஸ்தவ வாழ்வின் நோக்கம்.
   கிறிஸ்தவ வாழ்வை வேண்டிய முறை.
2. வாய்மொழிச் செபம், தியானம், ஆழ்நிலைத் தியானம்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்.

(06)

1. பக்க இல. 80
2. - நோயாளியையும் இடத்தையும் தூய்மையாக வைத்திருத்தல்.
   - சிரமம் பாராது நோயாளிக்கு பணிவிடை செய்தல்.
   - நோயில் பூசுதல் பெற நோயாளியை ஊக்குவித்தல்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்.

(07)

1. பக்கம் - 24
2. பக்கம் - 47
3. பக்கம் - 72
4. பக்கம் - 129

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank